781

முதியோர் கல்வி

மலர் 1] ஜனவரி 1952 [இதழ் 6

புது ஆண்டு உறுதிமொழி

நம் தமிழகத்தில் புது ஆண்டு பூக்கிறது. தமிழ் மக்கள் பூவை காய் கண்டு பழம் கண்டு பருகவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வாண்டு புதிய குடியரசு ஆக்க 21 வயது நிரம்பிய நாட்டு மக்களாகிய ஆண், பெண் யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் எல்லோரும் நல்வாழ்வு பெற எல்லோரும் உறுதி கொள்ளவேண்டும். மக்கள் ந[illegible] வாழ்வு பெறவும், மக்கள் ஆட்சி மக்களுக்கா[illegible] மக்களே நடத்தவும் எழுத்தறிவு இயக்கம் அடிப்படை[illegible]யானது. இப்புதிய ஆட்சி அறிவுப் பஞ்சமில்லா[illegible] ஆக்க ஓர் தீவிர திட்டத்தை வகுக்க இன்றே துணி[illegible] கொள்ளவேண்டும். நம் தமிழகத்தில் அடுத்த ஐ[illegible] தாண்டில் எழுத்தறிவின்மையைப் போக்க எழு[illegible] தறிவு பெற்ற எல்லோரும் உழைக்க உறுதி இன்றே கொள்ளவேண்டும். பொங்கும் பொங்கல் மங்களம் தமிழகம் எங்கும் தங்கி தழைத்தோங்க [illegible]பாடுபடுவோம்.

781
1.52

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம், சென்னை.

பொருள் அடக்கம்

முதல் பகுதி		பக்கம்
எழுத்தறிவு இயக்கமும், நூல் நிலையங்களும்	...	113
தமிழ்நாடு புத்தகாலய மகாநாடு	...	115
செய்தி சுருள்	... ...	117
இரண்டாம் பகுதி		
எழுத்தறிவு பாடங்கள்	... ...	119
மூன்றும் பகுதி		
படியாத பட்டுசாமி (நாடகம்)	... ...	121
மாதர் பகுதி	... ...	123

(114-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, முதியோர் கல்வி இயக்கமில்லாது நூல் நிலைய இயக்கம் ஒரு நாளும் திறம்பட மக்களுக்காக நிரந்தரமான முறையில் பயன் படாது. இவ்விரு இயக்கங்களும் இன்றியமையாததாகும். அரசாங்கத்தாரால் தீட்டப்பட்ட நூல் நிலையச் சட்டம் பயனடைய வேண்டுமென்றால், முதியோர் கல்வி இயக்கமும் நூல் நிலையமும் இன்றியமையாத முறையில் திருத்தி அமைக்க வேண்டும். முதியோர் கல்வி இயக்கத்தை விட்டு நூல் நிலைய இயக்கம் முதலில் ஆரம்பிக்க வேண்டும் என சொல்லுவோமானால் குதிரைக்கு பின்னே இருக்கும் வண்டியை முன் கொண்டு செல்வதாகும்.

மேலே கூறப்பட்ட காரணத்தால் நாங்கள் தமிழ் நாட்டு புத்தகாலய மகாநாட்டில், புத்தகாலயச் சட்டம் முதியோர் கல்வி இயக்கத்தை சேர்த்து திருத்தி அமைக்கப்படவேண்டுமென வற்புறுத்தியதுமல்லாது இன்றும், என்றும், எப்போதும் வற்புறுத்த கடைமைப்பட்டிருக்கின்றோம்!

மகாத்மா காந்தி

இப்புத்தாண்டிலே 30-1-'52-ந் தேதி ஒரு துயரமான சம்பவத்தை நினைவூட்டும் நாள். ஆம், அந்த நாளில்தான், மக்கள் நல்வாழ்வு பெற நம்மை சுதந்திர மக்களாக்கிய மாகபுருடரான காந்தியடிகள் மறைந்தநாள். இந்நாளில் முக்கியமாக நிர்மாணவேலையில் ஈடுபட்ட முதியோர் கல்வித் தொண்டர்கள், அவரது அரிய சேவைகளை நன்றாகச் சிந்தித்து மக்கள் எல்லோருக்கும் அவற்றை எடுத்துக் கூறி நினைவூட்டவேண்டும்.

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராம நூல் நிலைய நிர்வாகிகள் நூல் நிலையங்கள் அமைக்க இடவசதிக்காக விண்ணப்பம் செய்துகொண்டால் சர்க்கார் கிராம புறம்போக்கு நிலங்களைத் தாமதமின்றி ஜாரிசெய்ய ஏற்பாடு செய்யும்படி அரசாங்கத்தை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

புத்தகங்கள்மீது விற்பனைவரி விதிக்கக்கூடாதென்று மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

புத்தகாலய இயக்கம் செழிப்பதற்கு புத்தகங்களின் பாகுபாடு, புத்தகாலய நிர்வாகம், புத்தக வினியோகம் முதலியவற்றில் போதிய தேர்ச்சி பெறுவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் குறுகியகால பயிற்சி முகாம்கள் ஒவ்வொரு வருஷமும் அரசாங்கம் நடத்துவது அவசியமென மகாநாடு அபிப்பிராயப் படுகிறது.

பிரதேச மொழிகளில் சர்க்கார் வெளியிடும் மசோதாக்கள், சட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள் உட்பட எல்லாவற்றையும் புத்தகாலயங்கள் அனைத்திற்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென அரசாங்கத்தை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள், மடாலயங்கள், தேவஸ்தானங்கள் ஆகியவற்றில் பொது மக்களுக்குப் பயன்படக்கூடியவாறு அமைந்த புத்தகாலயங்களை நிறுவ வேண்டுமென கோவில் தேவஸ்தான தர்மகர்த்தாக்களையும் மடாதிபதிகளையும் மகாநாடு கேட்டுக்கொள்கிறது. மக்கள் எல்லோரும் நல்லெண்ணம், நல்லொழுக்கம், நல்வாழ்வு பெற அறிஞர்களின் கட்டுரைகளையும், புத்தகங்களைப் படித்து அறிய எழுத்தறிவு இயக்கம் இன்றியமையாததாகும். எனவே புத்தகாலயச் சட்டத்தில் எழுத்தறிவு இயக்கத்தைச் சேர்க்க அதற்குத் தக்கவாறு திருத்தி அமைக்கவேண்டுமென இம் மகாநாடு அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

2247ⁱ⁰ 224716

முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

மலர் 1 | ஜனவரி 1952 | இதழ் 6

எழுத்தறிவு இயக்கமும், நூல் நிலையங்களும்

தமிழ் நாட்டுப் புத்தகாலய மகாநாடு சென்னையில் கடந்த டிசம்பர் மாதம் 25, 26-ந் தேதிகளில் டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் தலைமையில் 'ராஜாஜி' மண்டபத்தில் கூடிற்று.

தமிழ் நாட்டில் பல்லாண்டுகளாக, முயற்சியில்லாது, இன்று இவ்வியக்கம் தக்கதொரு சமயத்தில் தோற்றி வைத்தவர்களை நாங்கள் மனமார வாழ்த்துகின்றோம்! பாராட்டுகின்றோம்!! வரவேற்கின்றோம்!!!

நெடுங்காலந் தொட்டு ஆந்திரா, கேரளா, ஏனைய விடங்களில், புத்தகாலய இயக்கம் அரசாங்கம் அக்கறை கொள்ளாத காலந் தொட்டு தோன்றி நடைபெற்று வருகின்றது. ஆனால், இன்று நம் அரசாங்கம் தீட்டிய சட்டம் அமுலுக்கு வந்திருக்கின்றது.

இம்மகாநாடு புத்தகாலய பல அம்சங்களை பற்றி தீவிரமாக நடத்தப்பட்டாலும், நாட்டு மக்களுக்கு எழுத்து ஊட்டல், புத்தகாலய இயக்கம் வெற்றி பெற மாபெரும், அடிப்படையான இயக்கம் என்பதை சிந்திக்கப்படவில்லை.

இம்மகாநாட்டில், தமிழ் நாட்டிலுள்ள பல அறிஞர்கள் கலந்துகொண்டு, புத்தகாலய இயக்கம் அவசியம் என்பதைப் பற்றி வற்புறுத்தினார்கள். அது மட்டுமல்லாது, அநேகமாக தீர்மானங்கள் புத்தக விற்பனைக்கு ஏதுவாகவும், சாதகமாகவும் இருந்ததே யொழிய, இன்று நிர்கதியாய் நிற்கும் ஏழை, படியாத பாட்டாளிக்கு எழுத்தூட்டி படிப்பிக்க வேண்டிய தீர்மானம் எதுவுமோ, அல்லது இன்று எழுத்தறிவு இயக்கம் புத்தகாலய இயக்கம் செவ்வனே நடக்க அடிப்படையான, உன்னதமான இயக்கம் என்புதை மறந்தார்கள். இதை சிந்திக்குங்கால் நாங்கள் வருந்துகின்றோம். இன்று புத்தகாலய இயக்கம் வேண்டாமென்று நாங்கள் எதிர்க்கவில்லை. மனமார வரவேற்கிறோம். ஆனால், நம் நாட்டின் மக்களின் தற்போதைய நிலைமையை நன்கு ஆராய்ந்து பார்க்குங் கால், 100-க்கு 85 சத விகிதம் வயது வந்தோர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கும்போது இப்புத்தகாலய இயக்கம் மக்களுக்கு ஆக்கப்பட்ட மாபெரும் ஸ்தாபனமாக யிருக்கமுடியாது.

எனவே, இக்கருத்தை யொட்டி திரு. பாஷ்யம், கனம் பக்தவத்சலம் முதலியோர் நன்கு எடுத்துக் காட்டினார்கள்.

திரு. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) பேசும்போது அரசாங்கம் புத்தகாலயச் சட்டத்தில் பகுதியாகிய பண வசூலை மாத்திரம் செய்திருக்கின்றார்கள் என குறை கூறினார். அவர் மேலும் 'தமிழ் வளர்ச்சி சங்கத்தின் சார்பாக பல அரிய நூல்கள் வெளியிட்டும் விற்பனையாகாமல் அலுவலகத்தில் அடுக்குக் கலையாது அடிக்கிவைக்கப்பட்டிருக்கின்றன' என்று சுட்டிக்காட்டினார்.

இதற்கு அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டுமானல் மக்களிடமிருந்து தாங்கள் படிப்பதற்கு ஆங்காங்கே புத்தகசாலைகள் வேண்டுமென்ற கோரிக்கைகளை மக்களிடமிருந்துவர வேண்டும். மேலும் புத்தகாலயங்கள் புத்தக விற்பனைக்கு ஆக்கி மக்கட்கு பயன்படாத போவதும் சரியல்ல.

மேலும் இன்று உள்ள மக்களின் மனோபாவத்திற்கு ஏற்றவாறும், எளிய நடையில் சிறந்த நூலாகவும் வெளியிடுவதோடு மட்டுமல்லாது, குறைந்த விலையில் ஏழை மக்களும்

வாங்கும் ரீதியில் லாபத்தை கருதாது விற்க வேண்டும். இவைகளின் உதவியால் மக்களுக்கு படிக்கவேண்டுமென்ற ஆசையை தூண்ட வேண்டும்.

தென்னிந்திய முதியோர் கல்விக் கூட்டுறவுப் பதிப்பகம், முதியோர் கல்வி இயக்கத்திற்கு வேண்டிய புத்தகங்களை தயாரித்து வெளியிட்டிருக்கிறோம். இது இம் மாகாணத்திலே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட ஓர் கூட்டுறவுப் பதிப்பகம். இதன் சார்பாக 15 தமிழ் புத்தகங்களும் 12 தெலுங்கு புத்தகங்களும் அரிய விஷயங்களடங்கியதாக வெளியிடப்பட்டிருக்கின்றன. தவிர, தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளில் 'சார்ட்' (அட்டைப்படம்) கள் தயார்செய்திருக்கிறோம். இவைகள் அதிக முயற்சி இல்லாமலும், விளம்பரம் இல்லாமலும் ஏராளமான புத்தகங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. இப்பதிப்பகம் அதிக லாபம் கருதாது கூடிய வரையில் அடக்க விலைக்கே விற்கப்படுகின்றன. இம் மாதிரியானப் பதிப்பகத்திற்கு மக்களும், அரசாங்கமும் ஆதரவு அளித்தால் எழுத்தறிவு பெற்ற ஏழையும் கிராம நூல் நிலையமும் நல்ல பயன்பெறும். ஆகவே இது போல் பல கூட்டுறவு பதிப்பகங்கள் ஏற்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கவேண்டும்.

மற்றொரு நண்பர் புத்தகாலய மகாநாட்டில் பேசும்போது, இன்று நம் அரசாங்கம் முதியோர் கல்விக்கும், ஆரம்பக்கல்விக்கும் ஏராளமான தொகை செலவு செய்து பலனளிக்கவில்லை என்றும் பெருப்பாலான மக்கள் படித்து மறுபடியும் படியாத நிலைமைக்கு வருகின்றார்கள் அதனால் அவர்கள் தாங்கள் எழுத்தறிவு பெற்றதை விருத்தி செய்ய தொடர்ந்து படிக்க நூல் நிலையம் அவசியமென்றார்.

நம் அரசாங்கம் புத்தகாலய இயக்கதிற்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்று நினைக்கிறோமோ அவ்வளவுதான் செய்கிறார்கள். முதியோர் கல்வி இயக்கம் அந்நியன் ஆண்ட காலத்தில் அவமதிக்கப்பட்டு வந்தது. ஆனால் புத்தகாலய இயக்கமோ ஓர் அளவு ஆதரவு பெற்று வந்தது.

நம் நாடு சுதந்தரமடைந்து நான்கு ஆண்டுகளாயினும் குடியாட்சிக்கு அடிப்படையான பண்பு முதியோர் கல்வி இயக்கம் என அரசாங்கம் அக்கரைக்காட்டி திட்டம் வகுத்து நடத்தும் காலத்தில் படித்த அறிஞர்கள் நகைக்கிறார்கள்! பணக்காரர்களும், ஓர் சில அறிஞர்களும் எதிர்க்கிறார்கள்!! முணுமுணுக்கிறார்கள், இதைச் சொல்லும்போது வெட்கப்படுகிறோம்! பரிதாபமாக நோக்குகிறோம் நம் நாட்டிலுள்ள ஏனைய மக்களை.

அவர்கள் தங்களை தானே உயர்த்துக் கொள்ள வேண்டும். குடியாட்சியின் பெயரால் ஒரு சிலரே ஆட்சி பீடத்திலமர்ந்து மக்கள் பெயரால் ஆளவேண்டுமென்ற விருப்பத்தினால் போலும்!

இன்றைய தினம் ஆரம்பக்கல்வி அவதூறுற்று காண காரணம் முதியோர் கல்வி இயக்கம் நிரந்தரமாக நடைபெறாததால் என பல அறிவாளிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இன்று பிள்ளைகளின் பெற்றோர்கள் கல்வியறிவு பெற்று, தங்களுடைய குழந்தைகளும் அதன் பலனை பெற ஆசையோடு பள்ளிக்கு அனுப்புவார்கள். ஆகையால் முதியோர் கல்விதான் ஆரம்ப கல்விக்கு அடிப்படையானது.

பள்ளிகளிலே, அதிக பிள்ளைகள் வரவேண்டுமென்ற காரணத்தால், ஒருவேளை சாப்பாடும் பாலும் தந்து, பள்ளிக்குவா! என அழைத்தும், வராத காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இதற்கு அரசாங்கம் தங்களுடைய முழுமுயற்சியை காட்டவேண்டும். குறிப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் முதியோர் கல்வி பாடசாலையும், அதை சார்ந்து ஓர் நூல் நிலையமும் இருத்தல் வேண்டும்.

குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும், வயது வந்தோர்களுக்கும் களிப்பூர, மாலை நேரங்களில் ரேடியோ போன்ற கருவிகளும் அமைத்தல் வேண்டும். இதைத் தோற்றி வைத்து திறம்பட நடத்த பயிற்சிப் பெற்ற முதியோர் கல்வி தொண்டர்கள் பலர் வேண்டும்.

இவர்களுடைய வேலை மாலை நேரங்களில் முதியோர் கல்வி நிலையங்களை கவனிக்கவும், பகல் வேளைகளில் வீடு வீடாக சென்றுபடிப்பிக்க ஊக்க மளித்தலும், குழந்தைகளை பள்ளிக்கனுப்ப பெற்றோர்களை தூண்டுவதுமாக இவர்கள் தொண்டாற்ற வேண்டும்.

[2-வது ரேப்பரில் பார்க்கவும்]

தமிழ்நாடு புத்தகாலய மகாநாடு

நடவடிக்கைகளும் தீர்மானங்களும்.

தமிழ் நாடு புத்தகாலய மகாநாடு டிசம்பர் 25, 26-ந் தேதிகளில சென்னை ராஜாஜி மண்டபத்தில் கூடிற்று. இம் மகாநாட்டிற்கு டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் தலைமை வகித்தார்.

டாக்டர் அழகப்ப செட்டியார் தனது தலைமையுரையில் புத்தகங்களைப் படிப்பதற்கு அடிப்படையானது கல்வி, ஜனநாயக அரசாட்சியில் படிப்பில்லாத வோட்டர்கள் இருப்பதே ஒரு பெருங்குறை என்றார். மேலும் அவர் கூறினார்.

“ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறிய புத்தகசாலை வைக்கவேண்டும். அதில் எளிய புத்தகங்களை வாங்கி வைக்கவேண்டும். சமுதாய ரேடியோ, பள்ளிக்கூடம், புத்தகசாலை எல்லாம் ஒரே இடத்திலிருக்கவேண்டும். பாரதியாரது கனவு நடைமுறையில் வேண்டுமானால் அறிவு வளர்ச்சியில் ஆசை கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தம்மால் ஒரு பத்துப் பேரையாவது புத்தகப் பிரியர்களாகச் செய்தோம் என்ற உணர்ச்சிக்கு உகந்தகாரியத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு ஈடுபடவேண்டும்.” என்றார்.

கனம் மந்திரி பக்தவத்சலம், மகாநாட்டை திறந்துவைத்தார். திரு. வி. பாஷ்யம் ஐயங்கார், பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். மத்திய அரசாங்க மந்திரி திரு. கே. சந்தானம் புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். பிறகு திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஸி. ஆர். சீனிவாசன், திரு. பாலசுப்பிரமணி அய்யர், திரு. ராமசாமி சாஸ்திரி, திரு. ஆர். பி. சேது பிள்ளை, திரு. தி. ஜ. ரா. கோபால் முதலிவர்களும் ‘அறிவின் வளர்ச்சிக்கு எழுத்தும், யிற்சியும், புத்தகப்படிப்பும் மிகவும் அவசியம் என்பதையும் கிராமந்தோறும் ஓர் புத்தகசாலை அமைக்கவேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள். பிறகு கீழ்கண்ட தீர்மானங்களை அம் மகாநாடு நிறைவேற்றியது :—

(1) நாகரீகமடைந்த ஒரு நாட்டின் மக்கள் அனைவருக்கும் படிப்பறிவு அவசியமானது. அதிலும் சர்வஜன வாக்குரிமை பெற்றுள்ள சுதந்திர பாரத நாட்டில் சகலரும் படிப்பறிவு பெறுவது இன்றியமையாதது. இந்திய அரசியல் சட்டத்தில் மக்கள் அனைவருக்கும் படிப்பறிவு அளிக்க உறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயம் நம்நாட்டு ராஜ்ய சர்க்கார்கள் ஆரம்பக்கல்விக்காக கோடிக் கணக்கான ரூபாய் வருஷந்தோறும் செலவிட்டு வருகின்றனர். சென்னை சர்க்கார் வருஷம் 7 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள். ஆரம்பப் பாடசாலைகளில் சேரும் பிள்ளைகளில் ஏழில் ஆறு பேர் அத்துடன் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். தொடர்ந்து படிக்க வசதி இல்லாதபடியால் சில வருஷங்களில் எழுத்தறிவை இழந்து விடுகின்றனர். ஆகையால் சர்க்கார் ஆரம்பக் கல்விக்கு செலவிடும் பணம் வீணாகிறது. சுதந்திர பாரத நாட்டில் படிப்பறிவை வளர்க்கவும் சர்வஜன வாக்குரிமையை நல்ல முறையில் உபயோகிக்கவும் ஆரம்பக் கல்விக்கு செலவிடப்படும் கோடிக்கணக்கான ரூபாய்கள் நன்கு பயன்படுவதற்கும் நாட்டில் புத்தகாலய இயக்கம் விரிவான முறையில் தீவிரமாக நடத்தப்பட வேண்டும் என்று இம் மகாநாடு கருதுகிறது. இரண்டு ஆரம்பப் பள்ளிகள் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறிய புத்தகசாலை இருக்க வேண்டும். பெரிய பட்டிணங்களில் ஒரு பெரிய மத்திய புத்தகசாலையும் அதைத் தவிர நகரங்களின் வெவ்வேறு பேட்டைகளில் 5000 மக்களுக்கு ஒன்றுவீதம் பல சிறிய புத்தகசாலைகளும் இருக்கவேண்டும் என்று மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(2) சென்னைப் புத்தகாலயச் சங்கத்தின் பல வருஷ முயற்சியின் பயனாக சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் சென்னை புத்தகாலயச் சட்டத்தை இம்மகாநாடு வரவேற்கிறது. அச்சட்டம் நிறைவேறி 2 வருஷத்துக்கு மேலாகியும்லைப்ரரி தீர்வை (ஸெஸ்) வசூலிக்கப்படுவது தவிர வேறு காரியத்தில் எதுவும் நடைபெறாத காரியத்தை சர்க்காருக்கு மகாநாடு ஞாபகமூட்டுகிறது. மேற்படி சட்டத்தின்படி நகரசபைகளும்

பஞ்சாயத்துகளும் வசூலிக்கும் புத்தகாலய வரித்தொகையை கட்டிடங்கள், மராமத்துகள், சிப்பந்தி சம்பளங்கள் முதலியவற்றிற்கே செலவழித்து விடாமல், அதில் புத்தகாலயங்களுக்குப் புஸ்தகங்கள் வாங்குவதற்கு அதை உபயோகப் படுத்துமாறு மகாநாடு வற்புறுத்துகிறது.

சென்னை புத்தகாலய சட்டத்தில் சில விதிமுறைகள் மிக்கக் கடுமையாக இருப்பதால் சட்டத்தினால் விளையவேண்டிய பலன்கள் இன்னும் கிட்டாமலேயே இருக்கின்றன. புத்தகாலயத்திற்கு சொந்த கட்டிடம் வேண்டும் என்பது போன்ற கடுமையான விதிகளைத் தளர்த்திவிட்டு, அனாவசிய நிபந்தனைகள் போடுவதை நிறுத்தி, தற்சமயம் தமிழ் நாட்டில் நடந்துவரும் சகல புத்தகாலயங்களுக்கும் புத்தகாலய சட்டத்தினால் கிடைக்கக்கூடிய முழு அனுகூலங்களையும் உடனே அளித்து புத்தகாலய இயக்கத்தை வளர்க்கவேண்டும் என்று சென்னை சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்துகிறது, ஐந்து வருஷத்திற்குள் புத்தகாலய திட்டத்தை பூரணமாக நிறைவேற்றி வைப்பதற்கு பாரத சர்க்காரும் சென்னை சர்க்காரும் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்றும் அம்முயற்சியில் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

அறிவு வளர்ச்சிக்கான விஞ்ஞானம், தொழில் போன்ற துறைகளில் நல்ல நூல்கள் வெளிவருவதற்கு ஊக்கமளிப்பதற்காகவேண்டி விதிகளில் அத்தியாயம் 7 ஷரத்து உபஷரத்துபடியுள்ள அதிகாரத்தை உபயோகிக்க நல்ல நூல்களை அரசாங்கமே மொத்தமாக வாங்கி புத்தகாலயங்களுக்கு அளிக்க வேண்டுமென இம்மகாநாடு வலியுறுத்துகிறது.

தமிழ் நாட்டில் இப்போதுள்ள 1000-க்கு அதிகமான பஞ்சாயத்து கிராம சங்கம் பொது மக்களால் நடத்தப்பெறும் புத்தகாலயங்கள் இவைகளுக்கு சென்னை புத்தகாலய சட்டத்தின் கீழுள்ள எல்லா விதமான சலுகைகளையும் உடனடியாக அரசாங்கத்தார் அளித்து இவற்றை பலப்படுத்தவேண்டும் என்று இம்மகாநாடு கோருகிறது.

(அ) தமிழ் நாடெங்கும் புத்தகாலயங்கள் சரிவர தொண்டாற்ற அவ்வப்போது அரசாங்கத்தாருக்கும் புத்தகாலயங்களுக்கும் யோசனை சொல்லக்கூடிய உதவிகளை செய்யவும் மகாநாட்டில் ஆஜராயிருக்கும் பிரதிநிதிகள் மற்றும் இதில் தொடர்பு உள்ளவர்கள் அடங்கியதுமான ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை "தமிழ்நாடு நூல் நிலையச் சங்கம்" என்ற பெயரில் நிறுவவேண்டும் என மகாநாடு தீர்மானிக்கிறது.

மேற்கூறிய நிரந்தர ஸ்தாபனத்தின் அமைப்பு விதிகளை தயாரிக்க இம்மகாநாடு டாக்டர் அழகப்ப செட்டியார், ரா. கிருஷ்ணமூர்த்தி, பெ. தூரன், எஸ். எம். பாசில், கி. சந்திரசேகரன், கே. எம். சிவராமன், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, வை. கோவிந்தன், எம். எம். இஸ்மாயில், எஸ். நடராஜன், டி. ஜே. ஆர். கோபால், கே. எம். சிங்காரவேலு முதலியார் இவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை மகாநாடு நியமிக்கிறது.

இந்த கமிட்டி மூன்றுமாத காலத்திற்குள் அமைப்பு விதிகளைத் தயாரித்து 15 பேர்களுக்கு குறையாத மகாநாட்டு பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் மகாநாடு தீர்மானிக்கிறது.

தமிழில் தகுதிவாய்ந்த புஸ்தகங்களை அந்தந்தத் துறையில் தேர்ச்சிபெற்ற அறிஞர்கள் படித்து பரிசீலனை செய்து புத்தகாலயங்களுக்கும் வாசகசாலைகளுக்கும் சிபார்சுசெய்ய "புத்தக சங்கம்" அமைக்கவேண்டும் என மகாநாடு தீர்மானிக்கிறது. இப்புத்தக சங்கத்தின் அமைப்பு விதிகளைத் தயாரிக்க மேற்படி குறிப்பிட்டுள்ள கமிட்டியை நியமிப்பதெனவும் அமைப்பு விதிகளை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் மகாநாடு தீர்மானிக்கிறது.

சென்னை ஓரியண்டல் மான்யுஸ்கிரிப்ட் லைப்ரரி, தஞ்சை சரஸ்வதி மகால் லைப்ரரி, இவைபோன்ற அரசாங்க வெளியீட்டு நிலையங்கள் சர்வகலாசாலைகள் இவைகளிலிருந்து மக்களுக்குப் பயன்தரும் நூல்களை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு தமிழ்நாட்டிலுள்ள புத்தக நிலையங்கள் அனைத்திலும் குறைந்த விலையில் கிடைக்கும்படியாக செய்யவேண்டுமென அரசாங்கத்தை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(2-வது ரேப்பரில் பார்க்கவும்)

செய்தி சுருள்

செஞ்சி தாலுக்கா முதியோர் கல்விக் கமிட்டி

நிதி திரட்டுவதற்கு உதவி நாட்டியக் கச்சேரி

செஞ்சி தாலுக்கா முதியோர் கல்விக் கமிட்டிக்கு நிதி திரட்டுவதற்காக பொள்ளாச்சி குமாரி கமலா அவர்களின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. திண்டிவனம் சப் கலெக்டர் உயர் திரு. எஸ். ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமைவகித்தார். தலைவர் தன் முன்னுரையில் முதியோர் கல்வியின் அவசியத்தையும் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டிய முறையையும் விளக்கிக் கூறி முதியோர் கல்வி நிதி திரட்டுவதற்காக குமாரி கமலா அவர்கள் இலவசமாகக் கச்சேரி நடத்த முன்வந்து அதன் மூலம் நாட்டுக்குத் தொண்டு செய்யும் பெருந்தன்மையைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். காரியதரிசி அவர்களால் அறிக்கை வாசிக்கப்பட்டது. அறிக்கையின் சுருக்கமாவது:—

“செஞ்சி தாலுக்கா முதியோர் கல்விக் கமிட்டி 1951 ஆகஸ்டு முதல் வேலை செய்து வருகிறது. தாலுக்கா முழுவதும் தற்போது 75 பாடசாலைகள் நடந்துவருகின்றன. சுமார் 1500 முதியோர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 1951 ஜுலை மாதம் ஜில்லா கமிட்டியார் நடத்திய பரிக்ஷையில் 405 முதியோர்கள் தேர்ச்சிபெற்று சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாதம் ஒன்றுக்கு ஆசிரியர்களுக்கு சம்பளமும் அலவன்ஸும் ரூ. 400 வரை சிலவு செய்கிறது. ஊதியம் குறைவாய் இருந்தாலும் ஆசிரியர்கள் பொது நோக்குடன் தங்கள் கடமையை சரிவர செய்துவருவது பாராட்டற்குரியது. மேலும் பல பள்ளிகளை ஆரம்பித்து இத்தாலுக்காவின் அறியாமையைப் போக்க இக்கமிட்டி முயற்சி செய்துவருகிறது.

சர்க்காருடைய முதியோர் கல்வித் திட்டம் இத்தாலுக்காவில் வெற்றிகரமாக நடந்துவருகிறது என்பது திண்ணம். மாகாண முதியோர் கல்வி சங்க செயலாளர் திரு. டி. ஜே. ஆர். கோபால் அவர்களும் மாகாண முதியோர் கல்வி பிரசார இலாக்கா செயலாளர் திரு. ஐராவதம் அவர்களும் கடந்த ஜுலை மாதம் இத்தாலுக்காவிற்கு விஜயம்செய்து சில முதியோர் பள்ளிகளைப் பார்வையிட்டு பள்ளிகள் நடக்கும் சிறந்த முறையையும் கமிட்டியின் தஸ்தாவேஜிகள் வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கையும் கமிட்டியின் திறமையையும் பாராட்டிச் சென்றனர்.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டரும் ஜில்லா முதியோர் கல்வி சங்கத் தலைவருமான உயர் திரு. எச். எஸ். பால் அவர்களின் ஓயாத உழைப்பும், தலைமைதாங்கி இருக்கும் சப் கலெக்டர் உயர் திரு. எஸ். ஏ. வெங்கடேசன் அவர்களின் பெருமுயற்சியும், இத்தாலுக்காவிலுள்ள எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உற்சாகமும், ஆசிரியர்கள் பொதுமக்கள் இவர்களின் ஒத்துழைப்பும், கமிடியாரின் ஊக்கமுமே இந்த பாராட்டுதலுக்குக் காரணமாகும். இவர்கள் யாவருக்கும் இக்கமிட்டி நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது.

இடையிடையே கமிட்டியின் நிதி நிலைமை சிறிது தள்ர்ந்தாலும் கமிட்டி பொறுமையுடன் வேலை செய்துவருகிறது. தற்போது கமிட்டிக்குப் போதிய நிதி இல்லாத காரணத்தால் பொது மக்களிடம் நன்கொடை வசூலிக்க வேண்டுமென எண்ணி இந்த உதவி நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திருமதி குமாரி கமலா அவர்களும் அவருடைய கோஷ்டியாரும் கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்க இலவசமாக நாட்டியக் கச்சேரி நடத்த மனமுவந்து இசைந்தார்கள். இது அவர்களுக்குள்ள நாட்டுப் பற்றையும் பொதுஜன சேவையையும் தெற்றென எடுத்துக் காட்டுகிறது. இதற்காக இக்கமிட்டி அவர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் அவர்கள் தங்கள் கலையில் முன்னேற்றமடைந்து பேரும் புகழும் பெற்று நாட்டின் கலைச் செல்வத்தை வளர்க்க அருள்புரிய வேண்டுமென்று கமிட்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறது.

இந்த உதவி கச்சேரியை முன்னிட்டு இத்தாலுக்காவின் பிரமுகர்கள் பலர் தாங்களே முன்வந்து நன்கொடை அளித்துள்ளனர். நன்கொடை மூலமும், டிக்கட் விற்பனை மூலமும் இந்த உதவி கச்சேரி மூலம் ரூபாய் (8500) எட்டாயிரத்து ஐநூறு நிதியாகக் கிடைத்திருக்கிறது. இதற்காக நன்கொடையாளர் பலருக்கும் இக்கமிட்டி நன்றி செலுத்திக்கொள்ளுகிறது.”

திருமதி குமாரி கமலா அவர்களின் பரத நாட்டியக் கச்சேரியை பொது மக்கள் கண்டு களித்து அவர்கள் திறமையைப் புகழ்ந்தார்கள்.

காரியதரிசி திரு. எம். கோவிந்தசாமி அவர்களால் நன்றி கூறப்பட்டு பரத நாட்டியக் கச்சேரி இனிது முடிந்தது.

ராசிபுரத்தில் முதியோர் கல்வி பிரசாரம்

முனிசிபல் ஆபீஸில் கமிஷனர் எஸ். நாச்சிமுத்து கவுண்டர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ராசிபுரம் ரேஞ்சு டெபுடி இன்ஸ்பெக்டர் மகமத் காதர் பாஷா சாகிப் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர். முதியோர் கல்வியின் நன்மைகள் பற்றி முதியோர் கல்வி பிரசார டெபுடி இன்ஸ்பெக்டர் கே. எஸ். குமாரகிருஷ்ணன், சேலம் முதியோர் கல்விச் சபை காரியதரிசி எம். வி. சீனுவாசன் ஆகியவர்கள் விரிவாகப் பேசினர். பின்னர் முதியோர் கல்வி படக்காட்சி காட்டப்பட்டது.

வடஆற்காடு ஜில்லா, செய்யார் தாலுக்கா ஆசிரியர்கள் சங்கம்

4-11-1951-ல் மாலை டாக்டர் இராஜேந்திர குமார் ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் செய்யார் ரேஞ்சு கல்வி அதிகாரி திரு. டி. ராகவன் தலைமையில் பல தீர்மானங்கள் நிறைவேறின அவைகளுள் :—

1. கிராமாந்தரங்களில் முதியோர் கல்வி 3 மாத கோர்ஸ் திட்டம் ஒரு வருஷமாக அங்கீகரிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

2. முதியோர் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு கொடுக்கும் சம்பளம் ரூ. 20-க்கு குறையாமல் இருக்க வேணுமாய் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

பின்பு செயலாளர் திரு. வி. எம். கோவிந்தராஜன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

ரயில்வே தொழிலாளர்களுக்கு கல்வி

எழுதப் படிக்கத் தெரியாத ரயில்வே தொழிலாளிகளுக்கு, கல்வியறிவு போதிக்க ரயில்வே ஸ்டேஷன்களில் வகுப்புகளை ஏற்படுத்தி நடத்த ரயில்வே போர்டு உத்திரவிட்டுள்ளது. அதாவது 20 பேர்களுக்கு மேற்பட்ட ஸ்டேஷனில் இத்தகைய வகுப்புகள் நடத்தப்படும். சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் மாலை நேரத்தில் 53 பேர்களுக்கு கல்வி புகட்டப்படுகிறது. இம்மாதிரி வகுப்புகள் 6 மாதத்திற்கு நடைபெறும். முக்கியமாக இதில் கல்வியறிவு இல்லாத முதியோர்களே அதிகம் என கருதப்படுகிறது.

முதியோர் எழுத்தறிவிப்பு கழகத் திறப்பு விழா

நவம்பர் 30-ந் தேதி மாலை சித்தராவத்தன் பாளையம் முனிசிபல் ஆரம்ப பாடசாலையில், ஒரு முதியோர் எழுத்தறிவு நிலையத்தை திரு. எம். முனுசாமி பிள்ளை, நகர சபை கவுன்சிலர் திறந்து வைத்தார். நகர சபை கவுன்சிலர் திருமதி வீரம்மாள் தலைமை வகித்து பேசுகையில் வளர்ந்தோர் எழுத்தறிவு இயக்கத்தின் நோக்கங்களையும், அதனுல் ஏற்படும் சாதனைகளையும்பற்றி விரிவாக எடுத்துச் சொன்னர்.

ஆரம்ப ஆசிரியர்கள், திரு. என். பழனியப்பன், திரு. எஸ். கிருஷ்ணராவ் ஆகியவர்கள் எழுத்தறிவு இயக்கம் முதியோர்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது. என்றும் அதை முதியோர்கள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று எடுத்து சொன்னர்கள். கடைசியில் வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

தஞ்சை தாலுக்கா முதியோர் கல்விச் சங்க பிரசாரக்கூட்டம்

21–10–51 ஞாயிறு மாலை 6 மணிக்கு கருந்தட்டான்குடி செல்லியம்மன் கோவில் தெரு, முனிசிபல் பாடசாலை முதியோர் கல்வி நிலையத்தில், திரு. கே. எஸ். பால நேத்ரம் தலைமையில் தஞ்சை தாலுக்கா முதியோர் கல்வி சங்க பிரசாரக் கூட்டம் ஒன்று நடந்தது. அவ்வமயம் முதியோர் கல்வியின் அவசியத்தைப்பற்றி திரு. என். முத்துகிருஷ்ணன், திரு. வி. சாரங்கபாணி, திரு. எச். கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். காரியதரிசியால் நன்றி கூறப்பட்டு தேச வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

பிறகு மாலை 4 மணிக்கு திரு. ஜீ. தேவ இரக்கம் தலைமையில் முதியோர் கல்வி ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்களுக்குப்பின் மறுபடியும் கூட்டத்தை நவம்பர் மாதத்தில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டபின் கூட்டம் சிறப்புற முடிவுற்றது.

இரண்டாம் பகுதி

தமிழிலுள்ள எல்லா எழுத்துக்களும் நமக்கு இப்போது தெரியும். நமக்குத் தெரிந்த எல்லா எழுத்துக்களையும் தெரியாதவர்களை அன்புடன் அழைத்து சொல்லிக் கொடுக்க வேண்டும்.

தமிழிலுள்ள எல்லா எழுத்துக்களையும் கற்றால் சுலபமாக சிறு புத்தகங்களைத் தானாகவே படிக்கலாம். நமக்கு வந்த கடிதத்தை ஒருவர் உதவியும் இல்லாமல் நாமே படிக்கவும், அதற்குப் பதில் எழுதவும் முடியும். இன்னும் ஏதாவது பத்திரம் எழுதுவதற்கும், தினசெய்தித்தாள்களைப் படித்து உலகத்திலும், நம் நாட்டிலும், ஊரிலும் நடக்கும் செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் முடியும். நாம் எல்லோரும் படிக்க எழுதத் தெரிந்தவர்களானால் நம்மால் நம் ஊரும், நம் நாடும் நன்மையும் பெருமையும் அடையும்.

இது மாதிரியான படிப்புக்கு நம்முடைய வீட்டுத் திண்ணைகளையும், தாழ்வாரங்களையும் படிக்கும் இடங்களாக உபயோகிக்கலாம். நம்முடைய ஒழிவு நேரங்களில் தினமும் சிறிது நேரம் படிக்க ஆரம்பித்தால் போதும். ஆண், பெண் எல்லோரும் சுலபமாக கற்கலாம். படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் தான் படித்ததை ஒருவருக்காவது கற்றுக் கொடுக்க வேண்டும். தர்மங்களில் சிறந்தது கல்விதானம்தான். பொன், மண் முதலியவைகளையும் தானம் செய்யலாம். ஆனால் அவைகள் கொடுத்தவரிடம் நிலைத்து நிற்காது. பொன் திருடரால் களவாடப் படலாம். மண்ணாகிய பூமியை விற்று விடலாம். விற்ற பணமும் நம்மிடமில்லாமல் வீணாகச் செலவாகிவிடும். அதனால் நாம் விரும்பிய பலன் கிடைப்பதில்லை. கல்வியோ ஒருவருக்கு அளிக்கப்பட்டால் அவர் உடல் அழியும் வரையில் நிலைத்து நின்று நமக்கும் நம் ஊருக்கும், நம் நாட்டுக்கும், எல்லோருக்கும் பலனளிக்கிறது.

நமது பெரியோர்கள் கம்பர், ஏசுநாதர், மகமதுநபி, திருவள்ளுவர், இராமலிங்கர், விவேகானந்தர், புத்தர், மகாத்மா காந்தி அடிகள் ஆகிய ஒவ்வொருவரும் நமக்கும், நம் நாட்டுக்கும் பல துறைகளில் தொண்டு செய்திருக்கிறார்கள். இவர்களால் செய்யப்பட்ட தொண்டு மனித உலகத்துக்கு ஒரு பெரிய தர்மமாகும். நம் முன்னேற்றத்துக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் உழைத்து இருக்கிறார்கள். இவர்கள் உழைப்பு என்றும் அழியாத உழைப்பு. நம்முடைய ஓய்வு நேரங்களில் இவர்களால் செய்யப்பட்ட சேவைகளுள்ள புத்தகங்களைப் படிக்க வேண்டும். நாமும் இவர்கள் காட்டிய வழியிலேயே உழைக்க முயலவேண்டும்.

நம் உழைப்பு முதல் நமக்கும் நம் வீட்டுக்கும், பிறகு நம் சமூகத்துக்கும், அதற்குப் பிறகு நம் நாட்டுக்கும் படிப்படியாக இருக்கவேண்டும். அந்த உழைப்பு உண்மையானதாகவும், நம்மைச் சேர்ந்தவர்களுக்

குப் பலன் தருவதாயும் இருக்க வேண்டும். நம்முடன் சேர்ந்து உழைக்கும் நண்பர்கள் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் ஒற்றுமையாக இருக்கவேண்டும். விரோதியானாலும் விரும்ப வேண்டும். அது தான் உண்மை உழைப்பாளியின் நல்ல நடத்தைக்கு அறிகுறியாகும்.

சுத்தம்

வீடு: நாம் இருக்குமிடத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நாம் இருக்கும் வீட்டையும், வாசலையும், பின்புறத்தையும் நாள் தோறும் சுத்தம் செய்யவேண்டும். குப்பையையும், குழந்தைகளின் மலத்தையும் கண்ட இடத்தில் போடக்கூடாது. அப்படி செய்வதால் காற்று கெட்டு விடுகிறது. அந்த அசுத்தக் காற்றை நாம் உட்கொண்டால் பல வியாதிகள் உண்டாகும். இவைகளைக் குறிப்பிட்ட இடத்தில் குழி தோண்டியோ அல்லது தொட்டியிலோ போட்டு வைத்தால் நல்ல உரமாகும். அவைகளை நம் பயிர்களுக்கு எருவாகப் போட்டால் நல்ல விளைச்சல் உண்டாகும். வீட்டிலுள்ள அசுத்தத்தைத் தெருவில் போடுவதால் நமக்கும் மற்றவர்களுக்கும் பலவிதமான வியாதிகளை நாமே வரவழைத்துக் கொள்கிறோம்.

ஆடை: நம் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது போல் நம்முடைய ஆடைகளையும்,படுக்கைகளையும் சுத்தமாகவைத்துக்கொள்ள வேண்டும். நாம் உடுத்தும் உடைகள் கந்தையானாலும் தினந்தோறும் துவைத்துக் கட்ட வேண்டும். அவசியமானால் வாரத்துக்கு ஒரு முறையாவது வண்ணானிடம் கொடுத்து சுத்தி செய்விக்கலாம். ஒருவர் கட்டிய உடையை மற்றொருவர் உடுத்துவது அநாகரிகம். நாம் படுத்து உறங்கும் படுக்கைகளையும் அடிக்கடி வெயிலில் உலர்த்தி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உடல்: நம் உடையைப்போல் உடலும் சுத்தமாக இருக்கவேண்டும். தினமும் உடலை நன்றாய்த் தேய்த்துக் குளிக்கவேண்டும். வாரத்துக்கு ஒரு முறையாவது தலைமயிர் சிக்குப் பிடிக்காதவாறு எண்ணெய் தேய்த்து முழுக வேண்டும். கோடை காலங்களில் நம் உடலில் வியர்வை அதிகமாதலால் காலையிலும், மாலையிலும் குளிப்பது நல்லது.

நாம் ஆரோக்கியமாக இருக்க வெளிப்புற சுத்தத்தைப் போலவே நம் உடலின் உட்புற சுத்தமும் அவசியம். உட்புறம் சுத்தமாயிருப்பதற்கு நாம் உட்கொள்ளும் உணவு சுத்தமாயிருக்க வேண்டும். அந்த உணவு நன்றாக சமைக்கப்பட்டதாயும், உடலுக்கு வலிமை ஊட்டுவதாயும் இருக்க வேண்டும். வேளை தவறி சாப்பிடுவதாலும், அழுகிய பழங்களையும், கெட்ட பண்டங்களையும் சாப்பிடுவதாலும் உடலுக்கு நோய் வருகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலால் நோய் இல்லாமல் வாழ்வதற்கு வேண்டியவைகளை நாம் நம்முடைய முயற்சியால் செய்துகொள்ள வேண்டும். மனக் கவலையும் சில சமயங்களில் உடல் நோய்க்குக் காரணமாதலால் கூடியவரையில் கவலையை ஒழித்து உள்ளத்தில் உற்சாகத்தோடு இருக்க வேண்டும். பிறருக்கு உண்மையான உதவி செய்யும்போது உள்ளத்தில் உற்சாகம் ஏற்படும்.

(தொடரும்)

மூன்றும் பகுதி

படியாத பட்டுசாமி

[இந்த சிறு நாடகம் திரு. கோவிந்தசாமி, காரியதரிசி ஜிஞ்ஜி தாலுக்கா முதியோர் கல்விச் சங்கம், தென் ஆற்காடு ஜில்லா, அவர்களால் எழுதப்பட்டது. புதிதாக படித்தவர்கள் சுலபமாக இதை படிப்பது மல்லாது, நாடகமாக நடிக்கவும் உதவும்—ஆசிரியர்.]

சீன் 9

இடம் :—லாவாதேவி சிதம்பரம் செட்டியார் வீடு—ஹரிஜன சுப்பன் நகை மீட்கிருன். பட்டு சாமி சந்திக்கிருன்.

சி. செட்டி :— என்ன கணக்கப் பிள்ளை. நம்ம லாவாதேவி எப்படி இருக்குது.

க. பிள்ளை :— முன்னப் போல ஜோரா இல்லீங்க. கொஞ்சம் ஜப்ப லாகவே இருக்குது.

சி. செட்டி :—இப்பல்லாம் அதிக கடன் வாங்கக்கூட வரமாட்ரான.

க. பிள்ளை :—ஆமாங்க. கடன் வாங்கரதாலே எவ்வளவு கஷ்டம் ஏற் படுது என்கிற விஷயம் எல்லா ருக்கும் தெரிஞ்சுட்டுது. பட்டினி யாவது இருப்பதே தவிர கடன் வாங்கக் கூடாது என்று மக்கள் நினைக்கிருங்க.

சுப்பன் :— செட்டியாரே வணக்கம்.

சிதம்பரம் :—யாரு இவன் சுப்பனு. ஆளு அடையாளமே தெரியலிய. எங்கடா வந்த ?

சுப்பன் :—ஒரு நகை வச்சி முப்பது ரூபா வாங்கனங்க. அத்த மூட்டும் போகலாமுண்ணு வந்தங்க.

சிதம்பரம் :—இப்ப என்னடா அவ சரம். அப்புறந்தான் மூட்டுக்கொண் டால் போவுது.

சுப்பன் :—அஞ்சாறு நெல்லு ஆப் புட்டுதுங்க. கொஞ்சம் சாப்பாட் டுக்கு வச்சிக்கினு கொஞ்சம் வித்துட் டங்க. காசி கரைந்து பூடுங்க.

சிதம்பரம் :— சரி கணக்கப் பிள்ளை. சுப்பன் கணக்கைப் பாரு.

க. பிள்ளை :—(கணக்கைப் புரட்டிப் பார்த்து) நாற்பத்தி மூணு ரூபா கொடு.

சுப்பன் :—என்னுங்க நல்லா புரட் டிப் பாருங்க. நகை வச்சி ஆறு மாதம் ஆவதுங்க. அதுக்கு வட்டி என்ன ஆகும். நானும் கணக்குப் போட்டுப் பாத்துத் தாங்க பணம் எடுத்துக்குனு வந்திருக்கறன்.

சிதம்பரம் :—என்னடா சுப்பா படிச்ச வனுட்டம் பேசறிய. என்ன சமாச் சாரம். பூச்சாட்டம் இருப்ப. சொல்ரத கொடுத்துட்டுப் போவ. மறித்தும் பேசறிய.

சுப்பன் :—நம்ம ஊர்ல நடக்கற ராப்பாள்ளிக் கூடத்தில சேர்ந்து படிச்சி ஏதோ ரெண்டு எழுத்தும் கத்துகினன். ஒரு கணக்கு வழக்கைப் பார்க்கவும் தெரிஞ்சிகினன். உங்க ரசீது பாத்து கணக்கு போட்டுத் தான் பணம் எடுத்துகினு வந்தங்க. நீங்க அதிமா சொல்ரிங்க.

சிதம்பரம் :—பாக்கும் போதே எனக் குத் தெரிஞ்சுது. படித்தவனையும்

படிக்காதவனையும் பாக்கும் போதே தெரியும். சரி ராப்பள்ளிக்கூடத்தில் இவ்வளவு சீக்கிரமா படிக்க முடியுமா ?

சுப்பன் :—என்னுங்க, ஒரு ஆறு மாதம் படிச்சா எவ்வளவோ தெரிஞ்சுகலாங்க. அப்புறம் அவனை ஏமாற்ற முடியாது, மூன்று வருஷம் படிச்சுட்டா நல்லா படித்தவங்களோட சமமாயிடுவோம்.

சிதம்பரம் :— சுப்பன் கணக்குப் போட்டு பணம் எடுத்து வந்திக்கிறான். வாங்கிக்கொண்டு நகையைக் குடுத்துடு கணக்கப்பிள்ளை.

க. பிள்ளை :—சரி கொண்டுவா : கணக்கு சரியாய் இருக்குதே. நான் போட்டது தான் கொஞ்சம் தப்பு, இந்தா நகை (நகை கொடுக்கிறுன்)

சிதம்பரம் :—இந்த முதியோர் கல்வி திட்டத்தினுலே நம்மாட்டம் ஆளுக்கெல்லாம் நஷ்டந்தான். (சுப்பன் போகிறுன். பட்டுசாமியை சந்திக்கிறுன்)

பட்டு :—என்னடா சுப்பா எங்க போய்வர ?

சுப்பன் :—செட்டியாரிடத்தில் ஒரு நகை வச்சிருந்தன். அதை மூட்டும் வரலாண்ணு போனன். என்னை பழைய ஆளா நினைத்து கணக்கு தப்பா சொன்னுரு. அப்புறம் நானு சொல்லி சரியா குடுத்து மூட்டுவர நாய்க்கரே.

பட்டு :—இப்ப என்ன புது ஆளா நீ ?

சுப்பன் :—நான் ஆறுமாதமா ராப் பள்ளிக்கூடம் படித்து கொஞ்சம் கண்ணு தெரிஞ்சிக்கன இல்லியா. என்னுங்க நாய்க்கரே. நீங்களும் வந்து படிச்சா எவ்வளவோ நல்ல துங்க.

பட்டு :—நீங்களெல்லாம் படிச்சுட்டுங்க நான் தாண்டா படிக்கல. எனக்கு ஒழிவு எங்கடா இருக்குது. படிக்கப்போனு பொழைப்புக் கெட்டுப்புடும். என்னமோ காலத்த தள்ளிக்கினே போவம்.

[போகிறுர்கள்]

சீன் 10

இடம் :—பட்டுசாமி வீடு—பட்டுசாமியும் குப்பாயியும்

பட்டு :—பையன் பள்ளிக்கூடம் போனது இன்னும் வல்லியா ?

குப்பாயி :—வந்துட்டான். அவனை மூன்ருவது மாத்திட்டாங்களாம். புது புஸ்தகம் வாங்கணும் பணம் கொடுண்ணு கேட்டான். அப்பா வரட்டுண்ணு சொன்னன். அதோ அவனும் வர்ரான்.

பையன் :—அப்பா என்னை மூன்ருவது மாற்றிவிட்டார்கள் புது புஸ்தகங்கள் வாங்குவதற்கு உபாத்தியாயர் ஒரு ரூபா வாங்கிக் கொண்டு வரச் சொன்னுர் கொடுப்பா.

பட்டு :—என்னிடத்தில் பணம் இல்ல. ரெண்டாவதிலியபடி, அடுத்த வருஷம் மூன்ருவது படிக்கலாம்.

பையன் :—அப்பாவுக்குப் படிக்கத் தெரியாத போனு பிள்ளையைப் படிக்க வைக்க மாட்டாருண்ணு எங்க உபாத்தியாயர் சொன்னுர். அது சரியா இவக்குதுப்பா. உங்களைப் போல பெரியவங்களெல்லாம் படிக்கிருங்களே, நீயும் படிக்கறது தானப்பா ? அம்மாவும் படிக்க வேண்டுமே.

(தொடரும்)

மாதர் பகுதி

பலாக்கொட்டை புட்டு

வேண்டிய சாமான்கள் :—பலாக்கொட்டை 1 சேர், சர்க்கரை $\frac{1}{4}$ சேர், தேங்காய் பாதி.

செய்யும் முறை

பலாக்கொட்டையைத் தோல் நீக்கித் தண்ணீரில் வேக வைக்க வேண்டும். நன்ருய் வெந்தபின், ஆட்டுக்கல்லில் போட்டு நன்ருக அரைக்க வேண்டும், பின் அதனுடன் சர்க்கரையையும், தேங்காயைத் திருவின பூவையும் சேர்த்து சாப்பிடவேண்டும்.

பலாக்கொட்டை உப்புமா

வேண்டிய சாமான்கள் :—பலாக்கொட்டை 1 சேர், பச்சைமிளகாய் 20, வெங்காயம் சிறியது 10.

செய்யும் முறை

பலாக்கொட்டையை தோல் நீக்கித் தண்ணீரில் வேக வைக்கவேண்டும். நன்ருய் வெந்தபின் ஆட்டுக்கல்லில் கொட்டையை போட்டு ஆட்டவேண்டும். பச்சைமிளகாயையும், வெங்காயத்தையும் சிறிது துண்டாக நறுக்கி வைக்க வேண்டும். அடுப்பில் தாளிக்கும் இரும்புச் சட்டியை வைத்துக் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி, காய்ந்தபின் கடுகு, உளுத்தம்பருப்பு போட்டுப் பின் வெங்காயம், பச்சைமிளகாய், கருவேப்பிலை போட வேண்டும். எல்லாம் வெந்தவுடன், பலாக்கொட்டைய ஆட்டி வைத்ததுடன் சிறிது உப்பும் சேர்த்து சட்டியில் போட்டு கிளற வேண்டும். சிறிது நேரத்தில் இறக்கிப் பின் சாப்பிடலாம்.

ஜவ்வரிசி கேக்

ஜவ்வரிசி ஒரு ஆழாக்கு எடுத்து 4 மணி நேரம் நன்ருக ஊர வைக்கவும், பிறகு கல்லுரலில் போட்டு நன்ருக வெண்ணேபோல் அரைத்து எடுத்து தனியாக வைத்துக் கொள்ளவும். மூன்று ஆழாக்கு சர்க்கரை, வெல்லம், எது கிடைக்கிறதோ அதில் செய்யலாம். சர்க்கரையில் ஜலம் விட்டு முறுகலாக காய்ச்சவும். அரைத்த மாவையும் கொட்டி நன்ருக சேர்த்து கிளரவும். வறுத்த முந்திரி ஏலம் குங்குமப்பூ கொஞ்சம் கலர் பவுடரும் போட்டு ஒட்டாமலிருக்க நெய் கொஞ்சம் விட்டு கிளறி ஒரு தட்டில் நெய் தடவி பதமானதும் கொட்டி பரப்பவும். ஆறியபின் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வழங்கலாம். உடம்பிற்கு நல்லதாயும் ருசியாயும் இருக்கும்.

மரவள்ளிக்கிழங்கு மாவு ரொட்டி

மரவள்ளிகிழங்கு மாவு அரைபடி எடுத்து ஜலம் விட்டு கெட்டியாய் பிசைந்து வைத்துக் கொள்ளவும். ஒரு தேங்காயை துருவிக் கொள்ளவும். பச்சைமிளகாய் வெங்காயம் கருவேப்பிலை முதலியவைகளே சிறு துண்டுகளாக செய்து தேங்காய் துருவல் தேவையான உப்பு இவைகளே பிசைந்து மாவுடன் சேர்த்து நன்ருக பிசைந்து சிறு உருண்டைகளாக செய்து கொண்டு வாழையிலேயில் எண்ணேயை தடவிக்கொண்டு மெல்லியதாக தட்டி தோசைக்கல்லில் இருபுறமும் சிவக்க எண்ணெய் விட்டு எடுத்தால் முறு முறுவென்று ருசியாக இருக்கும்.

ஜவ்வரிசி தோசை

ஜவ்வரிசியை முதல்நாள் இரவு தேவையானதை ஊறவைக்கவும். காலேயில் கையினல் பிசைந்து உப்பும் சேர்த்து கோதுமை மாவும் சேர்த்து கரைத்து தோசை வார்க்கலாம். தேவையான சட்னியோ சாம்பாரோ தேங்காய்பாலோ செய்து கொண்டால் நன்ருய் இருக்கும். ஜவ்வரிசி 4 பங்கு கோதுமை மாவை 1 பங்கு சேர்க்கவும்.

மரவள்ளிக்கிழங்கு ரவா கிச்சடி

மரவள்ளிகிழங்கு ரவை அரைபடி எடுத்து எண்ணெய் விட்டு சிவக்க வருத்தெடுத்து கொள்ளவும். பயத்தம் பருப்பு ஒரு ஆழாக்கு எடுத்து நன்ருக வேகவிடவும். அதிக ஜலம் விடாமல் திட்டமாய் வேக விடவும். ஒரு தேங்காயை பால் பிழிந்து வெந்த பருப்பில் விடவும். சிறு கொதி வந்தவுடன் தேவயான உப்பு சேர்த்து ரவையை கொட்டி கிளறவும்-ஒருவாணலில் எண்ணெய்யோ நெய்யோவிட்டு முந்திரி கடுகு உளுத்தம் பருப்பு நறுக்கிய பச்சைமிளகாய் இஞ்சி கருவேப்பிலை வெங்காயும் இவைகளே கொட்டி சிவக்க வதக்கி அடுப்பில் இருக்கும் ரவையுடன் கொட்டி நன்ருக கிளறி இரண்டு ஸ்பூன் நெய்யை விடவும். உதிரு[illegible] ருசியாக இருக்கும் ஜலம் மட்டும் [illegible] ரவைக்கு [illegible] இருக்க வேண்டும். 4 ஆழாக்கு ரவைக்கு மூன்று ஆ[illegible]க்கு ஜலம் போதும். (தொ[illegible]ரும்)

224719

தென்னிந்திய முதியோர் கல்விக் கழகப் பதிப்பகம்

தலைமை காரியாலயம் :

2/21, முதல் லயன் பீச் ரோட், சென்னை 1.

போன் : 3879.

*

● மக்களுக்காக, மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை ஏழை மக்கள் அடையக் கூடிய எளிய விலையில் வெளியிட, நம் மாகாணத்தின் ஒரே ஒரு பதிப்பகம்.

● ● அரசாங்கத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை வெளியிடும் பதிப்பகம்.

● ● பாலர், முதியோர் கல்விப் பிரசுரங்கள், உபகரணங்கள் தயார் செய்து பதிப்பிக்கும் பதிப்பகம்.

● மக்கள் ஆதரவே எங்கள்

உழைப்புக்குச் செழிப்பும்,

வெற்றியும்

224716

*

● முன் பணம் கட்டக் கூடிய, ஜில்லா, தாலுக்கா, பிர்கா விற்பனையாளர்கள் தேவை. தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்.

Edited and Published by Sri T. J. R. Gopal for S.I.A.E.A. at 2/21, First Line Beach, Madras-1 and Printed by Sri S. Sundaresan, L.P.T., at the Central Co-operative Printing Works, Ltd., 1/17, Mount Road, Madras—750-1-52.